**கவனிக்க.**- *2016.08.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.**- *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2016 ஆம் ஆண்டிற்கான குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1982 - 2016 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2016.08.26

*1982 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1470 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1480 |


**கவனிக்க.**- இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, செத்தெம்பர் 15 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தொலுவ | ஆண்டியாகடவத்த பிரதேசத்தின் உடபலாத்த பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

8-679

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | ரம்மலக, கந்துபலாத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

8-680

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 08.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | பண்டுவஸ்நுவர மேற்கு | கிரிதலான கோறளைப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தேவமெதி ஹத்பற்று பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

8-681

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 09.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | நாற்புறமும் சூழலும் கங்கவட்ட கோறளை | பொல்வத்த அம்பிட்டிய பிரதேசத்தின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

8-700

*திருத்தம்*

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு*

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2016**

*இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் III இல் 207 கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை உடையோரை தெரிவு செய்வது தொடர்பாக 2016.05.20 ஆந் திகதிய 1968 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விண்ணப்பங்களை கோரும் அறிவித்தல் தொடர்பானது. அதற்கமைய மேற்குறித்த வர்த்தமானி அறிவிப்பின் 01 ஆம் பந்தியின் (அ) வின் ஏற்பாடுகள் கீழ்வருமாறு திருத்தப்படுகிறது :-*

*(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2016.08.31 ஆகும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,*

*டி.கே.ஆர். ஏக்கநாயக்க*
*செயலாளர்*
*கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.*

*2016, ஓகத்து 12.*

*8-693*

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*நிதி அமைச்சு*

**விலைமதிப்பு திணைக்களம்**

**சட்ட அலுவலர் பதவிக்கு (நிறைவேற்று அலுவலர் வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

*விலைமதிப்புத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*பதவிகளின் எண்ணிக்கை - 1*

*1.* **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- *அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையொன்றின் பிரகாரம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி, வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இல. 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைய கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

*2.* **தேவையான தகைமைகள் :**

(i) ***கல்வி/ தொழில் தகைமைகள்.***- *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் சம்பந்தமான பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;*

(ii) ***சேவை அனுபவம்.***- உயர் நீதிமன்றச் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத செயலூக்கமிக்க சேவைக்காலத்தைக் கொண்ட தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) ***உடற் தகைமை.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) ***ஏனைய தகைமைகள் :***

* விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும் ;
* 2016.09.26 ஆந் திகதிக்கு பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தேவையான சகல தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (3) ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப் படுவர். அம்மூன்றாண்டு காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதிய 01/ 2014 ஆம் இலக்கம் பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றுநிருபங்களுக்கு அமைய நியமனத் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்புடையவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் விலைமதிப்புத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு தற்போது செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் மற்றும் ஏற்பாடுகளுக்கும் இந்நியமனம் உட்பட்டிருக்கும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்நியமனத்திற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா - 1,10,895 (SL-1-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இன் பிரகாரம் தாங்களுக்கு சம்பளம் வழங்கப்படும். (உதாரணம் 2016.01.01 ஆந் திகதி முதல் 2016.12.31 ஆந் திகதி வரை 27,871 ரூபா அடிப்படைச் சம்பளமும் 9,651 ரூபா சீராக்குதல் படியுமாகும்.)

6. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பின்வரும் புள்ளி வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| தொடர் இல. | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்றுக்கொண்ட சட்டம் தொடர்பான பட்டம் | | |
| | - முதலாம் வகுப்புச் சித்திக்கு | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல் சித்திக்கு | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ் சித்திக்கு | 10 | |
| | - சட்டக் கல்லூரி இறுதி ஆண்டின் முதலாம் வகுப்புச் சித்திக்கு | 15 | |
| | - சட்டக் கல்லூரி இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்புச் சித்திக்கு | 10 | |
| | (உச்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகள் என்பவற்றில் ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |

| தொடர் இல. | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 2. | **மேலதிக தொழில் தகைமைகள்**<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஏற்புடைய துறை தொடர்பான ஓராண்டிற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சட்டப் பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் ஒன்றுக்கு<br>(ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஏற்புடைய துறை தொடர்பாக 6 மாதத்திற்குக் குறையாத டிப்ளோமா சான்றிதழ் ஒன்றுக்கு<br>(ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 3 புள்ளிகள் வீதம்)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஏற்புடைய துறை தொடர்பாக 3 மாதத்திற்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்கு<br>(ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 2 புள்ளிகள் வீதம்) | | 15 |
| 3. | **மேலதிக அனுபவம்**<br>சட்டத்தரணியாக அரச நிறுவனத்தில் அல்லது தனியார் துறையில் சேவையாற்றிய தொழில் அனுபவம்<br>அனுபவம் - ஆறு மாதத்திற்குக் கூடிய ஒரு வருடத்திற்கு குறைந்த 2 புள்ளிகள் ஓராண்டிற்கு 5 புள்ளிகள் வீதம் உச்சமாக 30 புள்ளிகள் வழங்கப்படும்.<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டத்தரணியாக கடமையாற்றிய 3 வருட சேவைக்காலம் தவிர்ந்த)<br><br>20 வருடத்திற்குக் குறையாத சேவைக்காலத்தை நிறைவுசெய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) | | 30 |
| 4. | ஆங்கில மொழி பற்றிய தேர்ச்சி | | 15 |
| | ஆங்கில மொழியில் பயின்ற பட்ட பின்படிப்பு/ பட்டப் படிப்பு/ சட்டமாணிப் பட்டம்/ சட்டப்பின் படிப்பு பட்டம்<br>(ஏற்புடைய சகல பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொண்ட டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்கு<br>(ஒரு வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக்கொண்ட சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்கு | | |
| | - 6 மாதங்கள் அல்லது 720 மணித்தியாலங்கள் | 7 | |
| | - 3 மாதங்கள் அல்லது 360 மணித்தியாலங்கள் | 5 | |
| 5. | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பு ஒன்றுக்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றிருத்தல் | 15 | |

| தொடர் இல. | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலப்பகுதியைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்காக அல்லது 1500 மணித்தியாலங்களுக்காக | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்கு- | | |
| | 6 மாதங்கள் அல்லது 720 மணித்தியாலங்கள் | 7 | |
| | 3 மாதங்கள் அல்லது 360 மணித்தியாலங்கள் | 5 | |
| 6. | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை** | | 5 |
| | **மொத்தம்** | | 100 |

7. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்.**- கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு சகல விதத்திலும் பூரணமாக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தங்களது அடையாளத்தை நிரூபிக்க பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) விண்ணப்பப்படிவங்கள் 2016.09.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
நிதி அமைச்சு,
கொழும்பு 1.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ளது. ஏ4 அளவுடைய காகிதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புகள் முதலாம் பக்கத்தில் அமையுமாறும் 9 தொடக்கம் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் 12(i) - 12(ii) வரை 3 ஆம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் தெளிவாக நிரப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலைமதிப்பு திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/ முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது 22,935 ரூபாவை மாதாந்த ஒன்றிணைந்த வேதனமாகப் பெறும் நிரந்தர அரசாங்கப் பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(v) அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் தொழில் புரியும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(vi) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் வழங்குதல்.**- தாங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களது விண்ணப்பத் தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறானதொரு தகவல் பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புக்கு பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளின் பிரகாரம் தாங்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கு அமைய,

செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(விண்ணப்பத்தை பின்வருமாறு தயாரித்தல் வேண்டும்.)

**விலைமதிப்புத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக அறியத்தரவும்)

3. நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(சிங்களத்தில்/ தமிழில்) :----.

4. பால் நிலை (ஆண்-01, பெண்-02) :

ஆண் : ☐

பெண் : ☐

5. தாங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் மற்றும் ஆங்கிலம் - 1
தமிழ் மற்றும் ஆங்கிலம் - 2

6. தாங்கள் இலங்கைப் பிரசை என்பது பற்றி :----.

7. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

8. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. (i) தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் :----.

(ii) இரண்டாம் மொழி தொடர்பாகப் பெற்றுள்ள அதிகூடிய தகைமை :----.

(iii) முதலாம் மொழி தொடர்பாகப் பெற்றுள்ள அதிகூடிய தகைமை :----.
(க. பொ. த. (சா. தரம்) மற்றும் (உயர் தரம்) பரீட்சைகளில் எனின் வருடத்தையும் பெற்ற சித்தியையும் (திறமை/ விசேட) குறிப்பிடுதல் வேண்டும்.)

(iv) (i) பட்டப் படிப்புத் தகைமை :

| பட்டம் | பாடங்கள் | சித்தி (தரம்) | வருடம் | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) பட்டப் பின்படிப்புத் தகைமை :

| பட்டப்பின் படிப்பின் பெயர் | பட்டம் வழங்கப்பட்ட ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |

(v) சட்டத்தரணியாகப் பெற்றுள்ள அனுபவம் :----.

10. ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா ?

ஆம்/ இல்லை ☐

ஆமெனில் அதுபற்றிய விபரம் :----.

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் சான்று பகர்கிறேன்.

(ஆ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மையற்றது அல்லது பிழையானது என என்னைத் தெரிவுசெய்வதற்கு முன்பு தெரியவருமாயின் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின் தெரியவருமாயின் பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. (i) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவரை, நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதையும், அவர் 2016 ........................... மாதம் .......................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(ii) திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

விண்ணப்பதாரரினால் மேலே தரப்பட்டுள்ள தகவல்களை பரீட்சித்துப் பார்த்தேன் என்றும் அவை சரியானவை என்றும் அவரின் வேலை, வரவு, நடத்தை திருப்திகரமானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.

9-793

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் அதியுயர் வகுப்புக்குரிய நிருவாக கிராம அலுவலர் பதவிக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை -2016

### Limited Competitive Examination for Promotion to Supra Grade of Grama Niladhari - 2016

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்குரித்தாக நடாத்தப்படவிருந்த கிராம அலுவலர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான 2011.12.06 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டிற்குரித்தாக, மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள கிராம அலுவலர் சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய பரீட்சை நடாத்தப்படவிருக்கும் மத்திய நிலையம் மற்றும் மத்திய நிலையத்தினது இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை, அட்டவணை இலக்கம் 1 எனவும், மாவட்ட இலக்க அட்டவணையானது அட்டவணை இலக்கம் 2 எனவும் இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

1. **பதவியேற்றம் செய்யும் முறை :**

(i) மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 104 வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படும் எழுத்துமூலப் பரீட்சைக்கு, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரர்கள் தோற்றுதல் வேண்டும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவரைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபை/சபைகளினால் தகைமைகள் பரிசீலனை செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளை அழைக்கும்போது எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த புள்ளிகளது அளவு அல்லது அதற்கு மேலதிகமாகப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுள் எழுத்துமூலப் பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படுகின்ற வெற்றிடங்களது எண்ணிக்கை மற்றும் அவ்வெற்றிடங்களது

எண்ணிக்கையின் 25% அளவு ஆகிய இரண்டினது கூட்டுத்தொகைக்குச் சமமான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) அதியுயர் தரத்துக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள், சேவை நிலையங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகையில், முதலில், தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இடமாற்றங்கள் மூலம் இப்போது இருக்கும் அலுவலர்களுக்கு இடமாற்றம் பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அவ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், மாவட்டத்தில் எஞ்சுகின்ற வெற்றிடங்களில் 40% வீதத்துக்குப் பரீட்சையில் பெறும் மூப்பின் அடிப்படையில், சேவையில் இருக்கும் பிரதேச செயலாளர் பிரிவிற்கு வெளியே மாவட்டத்தினுள் வேறு ஒரு பிரிவிற்கு இணைப்புச் செய்யப்படுவதுடன், மாவட்டத்தினுள் நிலவும் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையினைவிட அதிகமானவர்கள் தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பங்களில், அவர்கள் மாவட்டத்துக்கு வெளியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இணைப்புச் செய்யப்படுவர். அவ்வாறு இணைப்புச் செய்யப்படும் இடங்களில் நியமனத்தை ஏற்காதவர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதுடன், அத்தகைய ஒருவருக்குப் பின்னரான சந்தர்ப்பங்களில் அந்நியமனத்துக்காக, இப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மீண்டும் கோரிக்கை விடுவதற்கு உரிமை கிடைக்க மாட்டாது.

2. **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சை நடாத்தப்படுவது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மட்டும் என்பதுடன், விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (i) | அலுவலக முகாமையும், அலுவலக முறைகளும் | 01 | 1 1/ 2 மணித் தியாலம் | 100 புள்ளிகள் |
| (ii) | தாபன அலுவல்களும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளும், அரச நிதி முகாமையும் | 02 | 1 1/ 2 மணித் தியாலம் | 100 புள்ளிகள் |
| (iii) | விடய ஆய்வு மற்றும் தொழில் அறிவு | 03 | 1 1/ 2 மணித் தியாலம் | 100 புள்ளிகள் |
| (iv) | பொது வினாப் பத்திரம் | 04 | 1 1/ 2 மணித் தியாலம் | 100 புள்ளிகள் |

பரீட்சையில் தேவையான தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40 புள்ளிகள் பெறப்படுதல் வேண்டும்.

3. **பாட விதானம்**.- (i) *அலுவலக முகாமையும், அலுவலக முறைகளும் :*

(அ) *அலுவலக முகாமையும் அலுவலக முறைகளும் (பாட இலக்கம் 01)*.- அலுவலக முகாமைத்துவதுடன் தொடர்புடைய நிறுவனக் கட்டமைப்பு, நிறுவனம் பற்றிய கோட்பாடுகள், பணிகளின் பகுப்பாய்வும் பணிகளை மதிப்பிடுதலும், தலைமைத்துவத்தை மேற்பார்வை செய்தலும், முடிவுகள் எடுக்கும் திறமையும், தொடர்பாடல் மற்றும் மக்கள் தொடர்பாடல் இணைப்பு மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பாக விடையளிக்க வேண்டியதுடன், அலுவலக முறைகள் என்பதன்கீழ், அலுவலக முறைகள் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள். அலுவலக நடைமுறைகள், ஆவணங்களும் கோவைப்படுத்தலும், மாதிரிப் படிவங்களின் பரிபாலனமும், மாதிரிப் படிவங்களைத் திட்டமிடுதல், கடிதப்பரிமாற்றங்கள், அலுவலக உபகரணங்களின் பாவனை பற்றிய நிருவாகம், அலுவலகத்தைத் திட்டமிடுதலும், சுற்றுப் புறங்களும், வேலை விபரம், வேலை பற்றிய கற்கையும் முறைமை தொடர்பான கற்கையும், வேலையளவீடு, வேலைப்படி முறைகளை அமைத்துக் கொள்ளுதல் என்பவை அடங்கிய வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கப்படுதல் வேண்டும்.

(ii) *தாபனப் பணிகள் மற்றும், அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் பணிகள், நடைமுறை விதிகள் மற்றும் அரச நிதி முகாமை (பாட இலக்கம் 02) :*

(அ) தாபனப் பணிகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடை முறை விதிகளுடன் தொடர்புடைய, அரச சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அரச அலுவலர்களின் தாபனப் பணிகள், அரச ஊழியர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள், சேவையினை முடிவுறுத்தல் எனும் பணிகளில் அதிகாரங்களைப்

பொறுப்பளித்தல், அரசாங்க ஊழியர்களின் ஒழுக்கம், நலன்புரி ஏற்பாடுகள், அரச ஊழியர்களுக்குரிய சிறப்புரிமைகள், தாபனப் பணிகள் தொடர்பாக அரசாங்கத் தினாலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் வெளியிடப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வெளியிடப் படவிருக்கும் பிரமாணங்கள், நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள் தொடர்பில் வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டியதுடன் அரச நிதி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய வருடாந்த மதிப்பீடுகள், கணக்கீட்டு அலுவலர் ஒருவரின் பொறுப்புகள், நிதி நிர்வாகம், நிதி அதிகாரங்களைக் கையளித்தல், பணம் பொறுப்பெடுத்தல், கணக்கிலிடுதல், பணம் செலுத்துதல், அரச நிதிப் பொறுப்பும், கட்டுநிதிக் கணக்கும், வங்கிக் கணக்குகளும், வழங்கல்களும் சேவைகளும், கேள்விப்பத்திர வேலைகள் (ரென்டர்), சுற்றாய்வு, கணக்காய்வு, அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் ஏடுகள், வருமான செலவுச் சுருக்கங்கள், வங்கி கணக்கிணக்கக் கூற்று மற்றும் நிதிப் பரிபாலன ஏடுகள், அரசாங்க நிதிப் பயன்பாடு தொடர்பாக அரசாங்கத்தினால் இதுவரை விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்களும், சுற்றறிக்கைகளும் தொடர்பான வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) *விடய ஆய்வும் தொழில்சார் அறிவும் (பாட இலக்கம் 03)*.- கிராம அலுவலர்களுக்குப் பல்வேறு சட்டதிட்டங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் நியதிச் சட்ட அரச நிறுவனங்கள் ஊடாகப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் பற்றிய அறிவு பரிசோதிக்கப்படுவதுடன் அவ்விடயங்களுடன் தொடர்பான விடய ஆய்வொன்று உள்ளடக்கப்படும்.

(iv) *பொது வினாப்பத்திரம் (பாட இலக்கம் 04)*.- பொது நிருவாகத்தின் தன்மை, பொது நிருவாகக் கட்டமைப்பு, அரசாங்கக் கொள்கைகளும் புதிய அரசாங்க சீர்திருத்தங்களும், அடிப்படையுரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்பட்ஸ்மன்) பாராளுமன்ற பொதுமனுக் குழு, அலுவலகக் கலாசாரம், ஒழுக்க கோவைகளும் நற்பண்புகளும் சிறப்பான அலுவலகச் சுற்றாடலை உருவாக்குதல், பணியாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள் பற்றிய சமூக அறிவியல் ரீதியிலான அங்கீகரிப்புகள், சேவையினைப் பெறுபவர்களுக்கு அரச அலுவலர்களிடமிருந்து நடைபெற வேண்டிய கடமைகள் பற்றிய பொதுவான அறிவு தொடர்பான விளக்கம் எதிர்பார்க்கப் படுகின்றது.

**4. தகைமைகள்**.- வினாப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதி நாளன்று விண்ணப்பதாரர்கள் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

*தொழில்சார் தகைமைகளும் அனுபவமும் :*

(i) கிராம அலுவலர் தரம் I அலுவலராகவிருத்தல் ;

அல்லது

(ii) உரிய திகதியில் ஆகக் குறைந்தது கிராம அலுவலர் தரம் II இல் 8 வருடங்களுக்குக் குறையாத முனைப்பான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த, கிராம அலுவலர் தரம் II அலுவலராக இருத்தல் ;

அல்லது

(iii) ஆகக் குறைந்தது கிராம அலுவலர் தரம் II இல் 5 வருடங்களுக்குக் குறையாத முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள பட்டதாரியாக இருத்தல்.

ஏனையவை :

(i) உரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

(ii) உரிய திகதிக்கு உடன் முந்திய ஐந்து (5) வருடங்களுள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) 2010.09.29 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 14.1 இன் II ஆம் பந்தியின் கீழ் III ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டு, அவ்வாட்சேர்ப்புத் திட்டத்தின் 10.1.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்ட அலுவலர்களது முன்னைய தரம் II இன் சேவைக்காலமும் உரிய சேவைக்காலமாகக் கருதப்படும்.

**5. சம்பள அளவுத் திட்டம்**.- (i) சம்பள குறியீட்டு இலக்கம் MN7 - 2016 (ரூபா 41,580 - 11 x 755 - 18 x 1,030 - ரூபா 68,425 (இச்சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படையில் சம்பளத்தைக் கணக்கிடும்போது 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/ 2016 இன் ஏற்பாடுகள் செயல்வலுப்பெறும்.

(ii) பதவியேற்றம் செய்யப்படும் அலுவலர்கள் இச்சம்பள அளவுத் திட்டத்தின் சம்பள அளவில் உட்படுத்தப்படுவது, தாபனக் கோவையின் (VII) ஆம் அதிகாரத்தில் 5ஆம் பிரிவிற்கான பொது நிர்வாகச் சுற்றறிக்கை 11/94 இன் அடிப்படையிலும், பொது நிர்வாகச் சுற்றறிக்கை 7/2000 இன் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு ஏற்பவாகும்.

6. **விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்கப்படுதல் :**

- இப்பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய மட்டும் விண்ணப்பதாரர்கள் அல்லது விண்ணப்பதாரிகளினால் தமது விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்து கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் A4 தாளில் ஒரு பக்கத்தில் தயார் செய்து கொள்ளப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதற் பக்கத்திலும் எஞ்சிய பாகங்கள் அதற்கடுத்த பக்கங்களிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தட்டச்சுப் பொறியொன்றின் உதவியுடன் தயார் செய்து கொள்ளப்பட முடியுமெனினும், விண்ணப்ப தாரர்களின் கையெழுத்துக்களினால் இங்கு காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவ்விண்ணப்பங்கள் பிழையின்றியும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுகையில், அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத் துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

- விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக நிரப்பப்படுதல் வேண்டும். ஒரு பிரதி தங்களது தனிப்பட்ட கோவையில் உட்படுத்தப்படுவதற்காகப் பிரதேச செயலாளருக்கும், மூலப் பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

- எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவை புரியும் பிரிவுக்குரிய பிரதேச செயலாளர் ஊடாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, த. பெ. இல. 1503, கொழும்பு'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2016 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவிதமாக அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு கடிதமோ அல்லது கடிதத்தின் பிரதியோ இணைக்கப்படக் கூடாது. எனினும், தாம் குறிப்பிடும் அத்தகைய தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சமர்ப்பிப்பதற்காக அவற்றைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணங்கள்.**– பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். அக்கட்டணம், பரீட்சை ஆணையாளரின் வருமானத் தலைப்பு 2003-02-13-க்கு வரவு வைக்கப்படக்கூடிய விதமாக நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டின் ஒரு ஓரத்தை விண்ணப்பப் பத்திரத்தின் உரிய இடத்தில் கழன்றுபோகாத விதத்தில் ஒட்டி இருத்தல் வேண்டும். அதன் ஒரு நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும். பரீட்சைக் கட்டணங்கள் எந்தவொரு காரணத்தினாலும் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

- 2011 ஆம் ஆண்டு நடாத்தப்படவிருந்த கிராம அலுவலர் சேவையின் அதியுயர் வகுப்பிற்குத் தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி விண்ணப்பித்துள்ள அலுவலர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுவதாகவிருந்தால் அக்கட்டணமானது 2016 ஆம் ஆண்டிற்கான பரீட்சைக்காக கவனத்திற்கொள்ளப்படும்.

அவ்வலுவலர்களால், 2011 ஆம் ஆண்டு பணம் செலுத்திப் பெற்றிருந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்று விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டில் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

8. (i) **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

- சரியாக விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நடாத்தப்படும் திகதியைக் குறிப்பிட்டு அனுமதி அட்டை வழங்கப் படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிர்வாகியிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை இன்றி அவர்களுக்குப் பரீட்சை மண்டபத்துக்கு உட்செல்வதற்கு அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

- பரீட்சை தொடங்கும் நாளில், பரீட்சை மண்டப அதிகாரியிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- எல்லாப் பரீட்சார்த்திகளும் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பரீட்சைச் சட்டதிட்டங்கள் பற்றி விளக்கம் பெற்றிருக்க வேண்டியதுடன், அவற்றைப் பின்பற்றியொழுகுவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.
- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைக்குத் தோற்ற முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை அளிக்கப்படும்.

*ஆள் அடையாள அட்டைகள்.-* பரீட்சார்த்திகளினால் பரீட்சை மண்டபத்தில், தாம் தோற்றும் எல்லாப் பாடங்களுக்காகவும் பரீட்சை மண்டப அதிகாரிக்கு உணர்த்தப்படக்கூடிய விதத்தில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தித் தெரிவித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
- செல்லுபடியான கடவுச் சீட்டு.

(ii) *பரீட்சைப் பெறுபேறுகள்.-* இவ்வறிவித்தலில் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துமூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% இற்கும் குறையாத புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களது, தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் இரண்டு மடங்கினைக் கொண்டதான அட்டவணையொன்று, செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு இற்கு அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படும் அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

9. (i) அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டுப் பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு ஐந்து நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனின், அறிவித்தலிற் குறிப்பிட்டபடி அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் கொழும்புக்கு வெளியே வசிப்பவர்களெனின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ளகத்தக்க இலக்கமொன்றைக் குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அறிவித்து விசாரித்தல் பொருத்தமானதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் தம்மிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பனவற்றை தயாராக வைத்திருத்தல் பொருத்தமானதாகும்.

(ii) பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல் அப்பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்குரிய அங்கீகரிப்பாகும் எனக் கருதப்படமாட்டாது.

10. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

11. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் உள்ளடக்கங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

நீல் டி அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7.
2016, ஆவணி 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலகப் பாவனைக்கு

**கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

Limited Competitive Examination for Promotion to Supra Grade of Grama Niladhari - 2016

(இலக்கம் 01 தொடக்கம் 05 வரையானவை முதற் பக்கத்திலும், இலக்கம் 06 தொடக்கம் ஏனையவை அதற்கடுத்த பக்கங்களிலும் உட்படுத்தப்படுதல் வேண்டும்)

| [ ] | [ ] | [ ] |
|---|---|---|
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி | கடமையாற்றும் மாவட்டம் | மாவட்ட இலக்கம் |

சிங்களம் - 2
தமிழ் - 3

(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(அட்டவணை இலக்கம் 2 இன் அடிப்படையில் உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | |
|---|---|
| | |
| | |

| நகர இலக்கம் | | |
|---|---|---|
| | | |
| | | |

(அட்டவணை இலக்கம் 1 இன் அடிப்படையில் நகரம் மற்றும் நகர இலக்கத்தை உள்ளடக்கவும்)

## I ஆம் பாகம்

(**கவனிக்கப்பட வேண்டியது**.- விண்ணப்பப்படிவம் பிழைகளின்றியும், தெளிவாகவும் பரீட்சார்த்தியின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

(ii) கடைசியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களது முதலெழுத்துக்கள் பின்னாலும் வரும் வகையில் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா. : GUNAWARDANA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.

(ii) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்) :----.

3. (i) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(ii) கிராம அலுவலர் பிரிவு :----.

இலக்கம் : ☐ ☐ ☐

4. (i) பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(தொடர்பான கூட்டில் இலக்கத்தைக் குறிப்பிடவும்)

(ii) பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(iii) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) இப்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி/உள்ளீர்க்கப்பட்ட திகதியும், கடிதத்தின் தொடர்பு இலக்கமும் :----.

(ii) மொத்த சேவைக்காலம் :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(iii) இப்போது வகிக்கும் தரம் :----.
அத்தரத்தில் சேவைக்காலம் :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. கிராம அலுவலர் சேவையில் உள்ளீர்க்கப்பட்ட அலுவலர் ஒருவரெனின், அது பற்றிய விபரம் :-
(தொடர்பான பந்தியை மட்டும் நிரப்புக)

(i) விசேட சேவைகள் அலுவலர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(ii) விவசாய அலுவலர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(iii) பயிர்ச் செய்கை விரிவாக்கற் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(iv) அதற்குச் சமமான வேறோர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

7. தாங்கள் அரசகரும மொழிகள் கொள்கையின் நோக்கங்களுக்காகச் சேவையில் பழமையானவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா? :----.

8. (i) சேவைக் காலத்தினுள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளீர்களா? :----.

(ii) அவ்வாறில்லையெனில், விவரங்களைத் தருக :----.

9. கூட்டுத்தாபனமொன்றில் அல்லது வேறு சேவையொன்றிற்கு சேவைக்காக நீங்கள் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளீர்களெனின், அது பற்றிய விவரங்களைத் தருக :----.

10. தாங்கள் வெளிநாட்டுத் தொழிலொன்றிற்காக அல்லது வேறோர் பணிக்காகச் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டிருப்பின் விவரங்களைத் தருக :----.

11. தங்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அவை பற்றிய விவரங்களைக் குறிப்பிடவும் :----.

**கவனிக்க வேண்டியது**.- வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணமாக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழன்று விடாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும்.

| |
|---|
| |

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பெறுமதி (ரூபா) :----.

...................... ஆகிய என்னால், மேற்குறிப்பிடப் பட்டுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழை யானவையெனக் கண்டுபிடிக்கப்படின், இச்சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் தொடர்பான எனது உரிமைகள் இரத்துச்செய்யப்படுவதற்கும், எனக்கெதிராக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை மெற்கொள்ளப்படுவதற்கும் முடியுமென்பதை நான் நன்கு அறிவதுடன், அதன்படி நடவடிக்கை மேற்கொள்வது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கேற்ப செயற்படுவதற்கு நான் இணங்குகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

### II ஆம் பாகம்

#### பிரதேச செயலாளரினால் நிரப்பப்படுதல் வேண்டும்

(i) திரு./திருமதி/செல்வி ..................................... மேலே வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை யென்றும் சரியானவையென்றும், அவரது தனிப்பட்ட கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் அவை சரியானவை யென்றும்,

(ii) விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள தென்றும், அந்தப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(iii) அவருக்கு எதிராக ஒழுக்காற்று ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்படவில்லையென்றும்,

(iv) அண்மையிலான ஐந்து ஆண்டுகளில் அவரது சேவை திருப்திகரமாக இருந்ததென்றும் ......... ஆந் திகதி தொடக்கம் கிராம அலுவலர் ......... ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விண்ணப்பத்தின் பிரதி, அலுவலரின் தனிப்பட்ட கோவையில் இணைக்கப் பட்டதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பிரதேச செயலாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
அலுவலக ரீதியிலான இலச்சினை :----.
திகதி :----.
(பொருத்தமற்றவற்றை வெட்டி விடுக.)

### அட்டவணை - இலக்கம் 01

#### பரீட்சை நடாத்தப்படும் நிலையங்கள்

இப்பரீட்சை, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி எனும் நகரங்களில் நடைபெறும். தொடர்பான நகரங்களும், நகர இலக்கங்களும் பின்வரும் கூட்டில் காண்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தின் தொடர்பான தலையங்கம் இந்நகர மற்றும் நகர இலக்கங்கள் என்பன கீழ்க் குறிப்பிடப்பட்ட கூட்டின் பிரகாரம் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரமும்/நகரங்களும் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 001 |
| கண்டி | 002 |
| காலி | 003 |
| மாத்தறை | 004 |
| யாழ்ப்பாணம் | 005 |
| மன்னார் | 006 |
| முல்லைத்தீவு | 007 |
| திருகோணமலை | 008 |
| மட்டக்களப்பு | 009 |
| குருநாகல் | 010 |
| அநுராதபுரம் | 011 |
| பதுளை | 012 |
| இரத்தினபுரி | 013 |
| கிளிநொச்சி | 014 |

மேற்குறிப்பிடப்பட்ட ஏதும் ஒரு நிலையத்துக்காக போதியளவு விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்கு அண்மையிலுள்ள நிலையமொன்றிற்கு தொடர்பான விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர்.

### அட்டவணை - இலக்கம் -02

மாவட்ட இலக்கப் பட்டியல்

| இலக்கம் | மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | 001 |
| 2 | கம்பஹா | 002 |
| 3 | களுத்துறை | 003 |
| 4 | கண்டி | 004 |
| 5 | மாத்தளை | 005 |
| 6 | காலி | 006 |
| 7 | மாத்தறை | 007 |
| 8 | அம்பாந்தோட்டை | 008 |
| 9 | குருநாகல் | 009 |
| 10 | புத்தளம் | 010 |
| 11 | நுவரெலியா | 011 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இலக்கம் | மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| 12 | இரத்தினபுரி | 012 |
| 13 | பதுளை | 013 |
| 14 | மொனராகலை | 014 |
| 15 | கேகாலை | 015 |
| 16 | அநுராதபுரம் | 016 |
| 17 | பொலநறுவை | 017 |
| 18 | அம்பாறை | 018 |
| 19 | மட்டக்களப்பு | 019 |
| 20 | திருகோணமலை | 020 |
| 21 | யாழ்ப்பாணம் | 021 |
| 22 | வவுனியா | 022 |
| 23 | மன்னார் | 023 |
| 24 | கிளிநொச்சி | 024 |
| 25 | முல்லைத்தீவு | 025 |

8-665/ 1

---

## உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் அதியுயர் வகுப்புக்குரிய நிருவாக கிராம அலுவலர் பதவிக்காக திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2016

## Competitive Examination for the Promotion to Supra Grade of Grama Niladhari Merit Basis - 2016

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் கிராம அலுவலர் சேவைக்குரிய கீழே 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள கிராம அலுவலர்களை, அச்சேவையின் அதியுயர் தரத்திற்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய பரீட்சை நடாத்தப்படவிருக்கும் மத்திய நிலையம் மற்றும் மத்திய நிலையத்தினது இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை, அட்டவணை இலக்கம் 1 எனவும், மாவட்ட இலக்க அட்டவணையானது அட்டவணை இலக்கம் 2 எனவும், இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

1. **தரமுயர்த்தும் விதிகள்**.- எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினது முதுமுறையின் மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்ற புள்ளிகளது கூட்டுத்தொகை வரிசையின் திறமை அடிப்படையில் நிரப்பப்படவேண்டிய நிருவாக கிராம அலுவலர்கள் பதவி வெற்றிடங்கள் 71 இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. **பதவியேற்றம் செய்யும் முறை :**

(i) இதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரார்களுக்கு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும். அப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பெறுகின்ற புள்ளிகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படும் மூவரைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபை/ சபைகளினால் மூப்பு மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்ற புள்ளிகளது கூட்டுத்தொகையின் வரிசையின் அடிப்படையில் முன்னுரிமை தீர்மானிக்கப்படும்.

(ii) எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற முன்னுரிமைப் பட்டியலில் இருக்கின்ற வெற்றிடங் களைப் போல் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகைமைகளைப் பெறுகின்றனர்.

(iii) அதியுயர் தரத்துக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள், சேவை நிலையங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகையில், முதலில், தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இடமாற்றங்கள் மூலம் இப்போது இருக்கும் அலுவலர்களுக்கு இடமாற்றம் பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அவ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், மாவட்டத்தில் எஞ்சுகின்ற வெற்றிடங்களில் 60% வீதத்துக்குப் பரீட்சையில் பெறும் மூப்பின் அடிப்படையில், சேவையில் இருக்கும் பிரதேச செயலாளர் பிரிவிற்கு வெளியே, மாவட்டத்தினுள் வேறு ஒரு பிரிவிற்கு இணைப்புச் செய்யப்படுவதுடன், மாவட்டத்தினுள் நிலவும் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையினைவிட அதிகமானவர்கள் தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பங்களில், அவர்கள் மாவட்டத்துக்கு வெளியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இணைப்புச் செய்யப்படுவர். அவ்வாறு இணைப்புச் செய்யப்படும் இடங்களில் நியமனத்தை ஏற்காதவர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படுவதுடன், அத்தகைய ஒருவருக்குப் பின்னரான சந்தர்ப்பங்களில் அந்நியமனத் துக்காக, இப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மீண்டும் கோரிக்கை விடுவதற்கு உரிமை கிடைக்க மாட்டாது.

(iv) இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழி மூலங்களில் மட்டுமே நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. (i) **பரீட்சை நடைமுறை**.- விண்ணப்பதாரர்கள், "நுண்ணறிவு மற்றும் விடய ஆய்வு" ஆகிய பாடங்களுக்குத் தோற்றுதல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கான காலம் 1½ மணித்தியாலங்களாகும். தகைமை பெறுவதற்குக் ஆகக்குறைந்தது மொத்தப் புள்ளிகள் 100 இல் 40 ஐப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(ii) *பாடவிதானம்*.- அலுவலக நிருவாகத்திற்கும் கிராம அலுவலர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பாகச் செயற்படுகையில் தேவைப்படக்கூடிய பொது அறிவு,

தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல், தர்க்க ரீதியாகத் தீர்த்தல் மற்றும் அலுவலக நிருவாகம் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படும்.

4. **முப்புரிமை மற்றும் திறமையினை மதிப்பிடுவதற்காகப் புள்ளி வழங்கும் களங்கள் :**

(i) மூப்புரிமை (ஆகக் கூடிய புள்ளிகள் 60).- 1 ஆம் தரத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றியுள்ள, ஓராண்டு காலம் திருப்திகரமான சேவைக்காலமொன்றிற்காக 4 புள்ளிகள் வீதம், (6-12 மாதங்களுக்கிடையிலான காலத்துக்கு இரண்டு புள்ளிகள், ஆறு மாதங்களுக்குக் குறைவான காலப்பகுதிக்குப் புள்ளி வழங்கப்பட மாட்டாது.) ;

(ii) திறமை (ஆகக் கூடிய புள்ளிகள் 35) ;

(ii-i) 1 ஆம் தரத்துக்கு நியமிக்கப்பட்ட பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மெச்சுதல்கள் (ஆகக் கூடிய புள்ளிகள் 15).

பொதுப் படிவம் 230B மூலம் வழங்கப்பட்டுள்ள மெச்சுதல் ஒரு சான்றிதழுக்கு 3 புள்ளிகள்.

அப்படிவத்திற்கு வெளியே வழங்கப்பட்டுள்ள 1 சான்றிதழுக்கு 1 புள்ளி.

(ii-ii) கிராம அலுவலர் அலுவலக முகாமைத்துவப் போட்டியில் பெற்ற வெற்றிகளுக்காக (ஆகக் கூடியது 20 புள்ளிகள்)

- அகில இலங்கை முதலாம் இடம் 15 புள்ளிகள்
- அகில இலங்கை இரண்டாம் இடம் 12 புள்ளிகள்
- அகில இலங்கை மூன்றாம் இடம் 10 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் முதலாம் இடம் 08 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் இரண்டாம் இடம் 06 புள்ளிகள்
- மாவட்டப் போட்டியில் மூன்றாம் இடம் 04 புள்ளிகள்
- பிரதேச செயலாளர் பிரிவில் முதலாம் இடம் 03 புள்ளிகள்
- பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டாம் இடம் 02 புள்ளிகள்
- பிரதேச செயலாளர் பிரிவில் மூன்றாம் இடம் 01 புள்ளி

(ஒரு ஆண்டில், ஒரு மட்டத்தில் பெறப்பட்டுள்ள வெற்றிகளின் மிக உயர்ந்த வெற்றிக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.)

(iii) நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் (ஆகக் கூடியது 5 புள்ளிகள்).

5. **தகைமைகள்.**- விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(i) கிராம அலுவலர் I ஆம் தரத்தில் 5 ஆண்டுகள் தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியும், உரிய வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளில் சித்திபெற்றிருத்தலும் வேண்டும்.

(ii) இறுதி 5 ஆண்டுகளில் சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **சம்பள அளவுத் திட்டம் :**

(i) சம்பளக் குறியீட்டு இலக்கம் MN7 - 2016 (ரூபா 41,580 - 11 x 755 - 18 x 1,030 - ரூபா 68,425) (இச்சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் சம்பளத்தைக் கணக்கிடும்போது 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 03/ 2016 இன் ஏற்பாடுகள் செயல்வலுப் பெறும்.)

(ii) பதவியேற்றம் செய்யப்படும் அலுவலர்கள், இச்சம்பள அளவுத்திட்டத்தின் சம்பள அளவில் வைக்கப்படுவது, தாபன விதிக் கோவையின் VII ஆம் அதிகாரத்தின் 5 ஆம் பிரிவிலும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 11/ 94 இலும், அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 7/ 2000 இலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையிலாகும்.

7. **விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படுதல் :**

(i) இப்பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவமொன்று, இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய மட்டும் விண்ணப்பதாரர்கள் அல்லது விண்ணப்பதாரிகளினால் தமது விண்ணப்பப்பத்திரங்களைத் தயார்செய்து கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் A4 தாளின் இரு பக்கங்களிலும் தயார்செய்துகொள்ளப்படுதல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 5 வரை அதன் முதலாம் பக்கத்திலும், எஞ்சிய பாகங்கள் அதற்கு அடுத்த பக்கங்களிலும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தட்டச்சு பொறியொன்றின் உதவியுடன் தயார் செய்துகொள்ளப்பட முடியுமெனினும், விண்ணப்பதாரர்களின் கையெழுத்துக்களினால் இங்கு காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவ்விண்ணப்பங்கள் பிழையின்றியும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக நிரப்பப்படுதல் வேண்டும். ஒரு பிரதி தங்களது தனிப்பட்ட கோவையில் உட்படுத்தப்படுவதற்காகப் பிரதேச செயலாளருக்கும், மூலப்பிரதி பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) எல்லாப் பரீட்சார்த்திகளும் தமது விண்ணப்பப் பத்திரங்களைத் தாம் சேவை புரியும் பிரிவுக்குரிய பிரதேச செயலாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, த. பெ. இல. 1503, கொழும்பு எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2016 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவிதமாக அனுப்புதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திறமைகளின் அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை- 2016" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவத்துடன் எந்த ஒரு கடிதமோ அல்லது கடிதத்தின் பிரதியோ இணைக்கப்படக் கூடாது. எனினும், தாம் குறிப்பிடும் அத்தகைய தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சமர்ப்பிப்பதற்காக அவற்றைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

8. **பரீட்சை கட்டணங்கள்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். அக்கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படக்கூடிய விதத்தில், நாட்டில் அமைந்துள்ள எந்த ஒரு தபால் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழன்றுபோகாத விதத்தில் ஒட்டி இருத்தல் வேண்டும். அதன் ஒரு நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும். பரீட்சைக் கட்டணங்கள் எந்தவொரு காரணத்தினாலும் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்** :

(i) சரியாக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும் திகதியைக் குறிப்பிட்டு அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி அவர்களுக்குப் பரீட்சை மண்டபத்துக்குள் உட்செல்வதற்கு அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்று வழங்குதல், அப்பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்குரிய அங்கீகாரிப் பாகும் எனக் கருதப்படமாட்டாது.

(iii) எல்லாப் பரீட்சார்த்திகளும், அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பரீட்சைச் சட்டதிட்டங்கள் பற்றிய விளக்கம் பெற்றிருக்க வேண்டியதுடன், அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இயன்ற வகையில், திணைக்களத் தலைவர்களினால் கடமை விடுமுறை வழங்கப்படும்.

(v) *ஆள் அடையாள அட்டைகள்*.- பரீட்சார்த்திகளினால் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் எல்லாப் பாடங்களுக்காகவும், பரீட்சை மண்டப அதிகாரிக்கு உணர்த்தப்படக்கூடிய விதத்தில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தித் தெரிவித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை.
- செல்லுபடியான கடவுச் சீட்டு.

(vi) *பரீட்சைப் பெறுபேறுகள்*.- இவ்வறிவித்தலில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களது அட்டவணையொன்று செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்படும். உரிய திறமைப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவுடன் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் திறமைப் புள்ளிகளது மொத்தப் புள்ளிகளது முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதி பெறுபேற்று அட்டவணை செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்படும். உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது அறிவித்தலின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படும் அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்படும்.

10. அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு ஐந்து நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனின், அறிவித்தலில் குறிப்பிட்டபடி அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தை சரியாகக்

குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் கொழும்புக்கு வெளியே வசிப்பவர்களெனின் அவ்விபரங்களுடன் அனுமதி அட்டையை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க இலக்கமொன்றைக் குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அறிவித்து விசாரித்தல் பொருத்தமான தாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் தம்மிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பனவற்றைத் தயாராக வைத்திருத்தல் பொருத்தமானதாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் உள்ளடக்கங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

நீல் டி அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, ஆவணி 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலகப் பாவனைக்கு

**திறமை அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016**

Competitive Examination for the Promotion to Supra Grade of Grama Niladhari Merit Basis - 2016

(இலக்கம் 01 தொடக்கம் 05 வரையானவை முதற் பக்கத்திலும், இலக்கம் 06 தொடக்கம் ஏனையவை அதற்கடுத்த பக்கங்களிலும் உட்படுத்தப்படுதல் வேண்டும்)

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி | கடமையாற்றும் மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| | | |

சிங்களம் - 2
தமிழ் - 3

(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

(அட்டவணை இலக்கம் 2 இன் அடிப்படையில் உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | | நகர இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

(அட்டவணை இலக்கம் 1 இன் அடிப்படையில் நகரம் மற்றும் நகர இலக்கத்தை உள்ளடக்கவும்)

## I ஆம் பாகம்

(**கவனிக்கப்பட வேண்டியது**.- விண்ணப்பப்படிவம் பிழைகளின்றியும், தெளிவாகவும் பரீட்சார்த்தியின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும்)

1. (i) முழுப்பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)
(ii) கடைசியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர் களது முதலெழுத்துக்கள் பின்னாலும் வரும் வகை யில் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா. : GUNAWARDANA, H. M. S. K.)
(iii) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்) :----.

3. (i) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(ii) கிராம அலுவலர் பிரிவு :----.

இலக்கம் : ☐ ☐ ☐

4. (i) பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(தொடர்பான கூட்டில் இலக்கத்தைக் குறிப்பிடவும்)
(ii) பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) இப்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி/உள்ளீர்க்கப்பட்ட திகதியும், கடிதத்தின் தொடர்பு இலக்கமும் :----.
(ii) மொத்த சேவைக்காலம் :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
(iii) இப்போது வகிக்கும் தரம் :----.
அத்தரத்தில் சேவைக்காலம் :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. கிராம அலுவலர் சேவையில் உள்ளீர்க்கப்பட்ட அலுவலர் ஒருவரெனின், அது பற்றிய விபரம் :-
(தொடர்பான பந்தியை மட்டும் நிரப்புக.)

(i) விசேட சேவைகள் அலுவலர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(ii) விவசாய அலுவலர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(iii) பயிர்ச் செய்கை விரிவாக்கச் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

(iv) அதற்குச் சமமான வேறோர் சேவையில் சேர்ந்த திகதி :----.
சேவைக் காலம் :----.

7. தாங்கள் அரச கரும மொழிகள் கொள்கையின் நோக்கங்களுக்காகச் சேவையில் பழமையானவரா அல்லது புதிதாகச் சேர்ந்தவரா? :----.

8. (i) சேவைக் காலத்தினுள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளீர்களா? :----.

(ii) அவ்வாறில்லையெனில், விவரங்களைத் தருக :----.

9. கூட்டுத்தாபனமொன்றில் அல்லது வேறு சேவையொன்றிற்குச் சேவைக்காக நீங்கள் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளீர்களெனின், அது பற்றிய விவரங்களைத் தருக :----.

10. தாங்கள் வெளிநாட்டுத் தொழிலொன்றிற்காக அல்லது வேறோர் பணிக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டிருப்பின் விவரங்களைத் தருக :----.

11. தங்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அவை பற்றிய விவரங்களைக் குறிப்பிடவும் :----.

**கவனிக்க வேண்டியது**.- வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ளவாறு பரீட்சைக் கட்டணமாக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்ட தபால் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழன்று விடாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும்.

| |
|---|
| |

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பெறுமதி (ரூபா) :----.

...................... ஆகிய என்னால், மேற்குறிப்பிடப் பட்டுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும், இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவையெனக் கண்டுபிடிக்கப்படின், இச்சேவையின் அதியுயர் தரத்துக்குப் பதவியேற்றம் தொடர்பான எனது உரிமைகள் இரத்தாக்கப்படுவதற்கும், எனக்கெதிராக ஒழுக்காற்று ரீதியில் நடவடிக்கை மெற்கொள்ளப்படுவதற்கும் முடியுமென்பதை நான் நன்கு அறிவதுடன், அதன்படி நடவடிக்கை மேற்கொள்வது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கேற்ப செயற்படுவதற்கு நான் இணங்குகின்றேன்.

----,
அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

## II ஆம் பாகம்

### பிரதேச செயலாளரினால் நிரப்பப்படுதல் வேண்டும்

(i) திரு./திருமதி/ செல்வி .................................... மேலே வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை யென்றும் சரியானவையென்றும், அவரது தனிப்பட்ட கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் அவை சரியானவையென்றும் ;

(ii) விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள தென்றும், அந்தப் பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ள தென்றும் ;

(iii) அவருக்கு எதிராக ஒழுக்காற்று ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்படவில்லையென்றும் ;

(iv) அண்மையிலான ஐந்து ஆண்டுகளில் அவரது சேவை திருப்திகரமாக இருந்ததென்றும் ......... ஆந் திகதி தொடக்கம் கிராம அலுவலர் I ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்விண்ணப்பத்தின் பிரதி, அலுவலரின் தனிப்பட்ட கோவையில் இணைக்கப் பட்டதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
பிரதேச செயலாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
அலுவலக ரீதியிலான இலச்சினை :----.
திகதி :----.
(பொருத்தமற்றவற்றை வெட்டி விடுக.)

### அட்டவணை - இலக்கம் 01

பரீட்சை நடாத்தப்படும் நிலையங்கள்

இப்பரீட்சை, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி எனும் நகரங்களில் நடைபெறும். தொடர்பான நகரங்களும், நகர இலக்கங்களும் பின்வரும் கூட்டில் காண்பிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தின் தொடர்பான தலையங்கம் இந்நகர மற்றும் நகர இலக்கங்கள் என்பன கீழ்க் குறிப்பிடப்பட்ட கூட்டின் பிரகாரம் நிரப்பப்படுதல்

வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரமும்/நகரங்களும் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 001 |
| கண்டி | 002 |
| காலி | 003 |
| மாத்தறை | 004 |
| யாழ்ப்பாணம் | 005 |
| மன்னார் | 006 |
| முல்லைத்தீவு | 007 |
| திருகோணமலை | 008 |
| மட்டக்களப்பு | 009 |
| குருநாகல் | 010 |
| அநுராதபுரம் | 011 |
| பதுளை | 012 |
| இரத்தினபுரி | 013 |
| கிளிநொச்சி | 014 |

மேற்குறிப்பிடப்பட்ட ஏதும் ஒரு நிலையத்துக்காகப் போதியளவு விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்கு அண்மையிலுள்ள நிலைய மொன்றிற்குத் தொடர்பான விண்ணப்பதாரர்கள் அனுப்பப் படுவர்.

**அட்டவணை - இலக்கம் -02**

மாவட்ட இலக்கப்பட்டியல்

| இலக்கம் | மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|---|
| 1 | கொழும்பு | 001 |
| 2 | கம்பஹா | 002 |
| 3 | களுத்துறை | 003 |
| 4 | கண்டி | 004 |
| 5 | மாத்தளை | 005 |
| 6 | காலி | 006 |
| 7 | மாத்தறை | 007 |
| 8 | அம்பாந்தோட்டை | 008 |
| 9 | குருநாகல் | 009 |
| 10 | புத்தளம் | 010 |
| 11 | நுவரெலியா | 011 |
| 12 | இரத்தினபுரி | 012 |
| 13 | பதுளை | 013 |
| 14 | மொனராகலை | 014 |
| 15 | கேகாலை | 015 |
| 16 | அநுராதபுரம் | 016 |
| 17 | பொலநறுவை | 017 |
| 18 | அம்பாறை | 018 |
| 19 | மட்டக்களப்பு | 019 |
| 20 | திருகோணமலை | 020 |
| 21 | யாழ்ப்பாணம் | 021 |
| 22 | வவுனியா | 022 |
| 23 | மன்னார் | 023 |
| 24 | கிளிநொச்சி | 024 |
| 25 | முல்லைத்தீவு | 025 |

8-665/ 2

---

## திருத்தம்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

**இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இன் வெற்றிடப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு**

திறந்த போட்டிப் பரீட்சை - 2015

2016.06.17 ஆந் திகதிய 1972 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் என்னும் தலைப்பின் கீழ் மேற்குறிப்பிட்ட தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை அறிவித்தலின் 5 ஆவது பந்தி கீழ்க்காணப்படும் வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும். அதனடிப்படையில் அவ் அறிவித்தலின் முதலாம் பந்தியின் இறுதியில் (அ) இன் கீழ் குறிப்பிட்ட விண்ணப்ப முடிவுத் திகதி 2016.09.26 ஆகும்.

**வயது எல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 22 வயதிற்கு குறையாதவராகவும் 36 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. மேலும், 3 ஆவது பந்தி கீழ்க்காணப்படும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமின்றி காணப்படுகின்றது.

**சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25 ஆந் திகதிய மற்றும் 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு ஏற்ப இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (SL-1-2016) ஆகும். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக அதன் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள வகையில் சம்பளம் வழங்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே.ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு.

2016, ஓகத்து 10.

8-717

---

### கல்வி அமைச்சு

இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016

2014.10.22 ஆந் திகதிய 1885/ 31 ஆம் இலக்க இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான

வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2016, திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

2. இப்பரீட்சைகளுக்கு உரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 2014.10.22 ஆந் திகதிய 1885/ 31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக இப்பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை ஒழுங்கு விதிகள்.**- வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) பாட இல. 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் கண்காணிப்பு - 100 புள்ளிகள் (நேரம் : 3 மணித்தியாலம்)

(ii) பாட இல. 02 - பாடசாலைத் திட்டமிடல் - 100 புள்ளிகள் (நேரம் : 3 மணித்தியாலம்)

(iii) பாட இல. 3 - கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள் - 100 புள்ளிகள் (நேரம் : 3 மணித்தியாலம்)

பாடத்திட்டம் :

(i) *பாடசாலை நிருவாகம் மற்றும் கண் காணிப்பு.*- பாடசாலை ஒன்றின் நல்லாட் சிக்காக அதிபர் ஒருவரின் கடமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அனுபவத்தைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பங்கேற்பு, திட்டமிடல், பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேரசூசி தயாரித்தல், பொறுப்புக்களைப் பகிர்தல், பாடசாலை அபிவிருத்திக்கான மக்கள் பங்கேற்பு பாடசாலையை அடிப்படை யாகக் கொண்ட முகாமைத்துவம், பாட சாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன் புரி வசதிகள், மாணவர்கள் நட்பு, பாடசாலை எண்ணக்கரு, மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி ஆகிய துறைகள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

(ii) பாடசாலைத் திட்டமிடல்.- அபிவிருத்தியின் வழிகாட்டியாக அதிபர் ஒருவரின் கடமைகள் பற்றி பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றினைப் பரீட்சிப்ப தற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகாமைத்துவ சபைகள், பாடசாலை ஒன்றின் நோக்கு மற்றும் செயற்பணி, பாடசாலை தகவல் அடிப்படை யிலான தயாரிப்புக்கள், இணைந்த திட்டங்கள், நீண்டகால மற்றும் குறுங்காலத் திட்டங்கள், வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டங்கள், பாடசாலை வலையமைப்புக்கள் மற்றும் வளங்களைத் திட்டமிடல், பிராந்திய அபிவிருத்திக்குப் பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

(iii) *கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள்.*- கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புதிய எண்ணக்கரு, அனுபவத்தின் மூலம் கற்பித்தல், தர்க்க ரீதியான காரணங்கள், கல்வியின் சமதன்மை, விசேட கல்வித் தேவை உள்ளவர்களுக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முறைசார் கல்வி, முதியோர் கல்வி, வாழ்நாள் கல்வி, திறமையை அடிப்படையாகக் கொண்ட கல்வி, வாழ்வாதாரக் கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆகிய பாடவிடயங்கள் பற்றிய அறிவு அளவிடப்படும்.

3. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் அவ்வப் பாடங்களில் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

4. **பரீட்சையின் மொழி மூலம்.**- சிங்களம் மற்றும் தமிழ் (விண்ணப்பிக்கப்பட்ட மொழியினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது)

5. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச்செய்யப்படும்.

5.1 பரீட்சைக்கு தேற்றிய சகல விண்ணப்பதாரர் களினதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறு பேற்றுப் பட்டியல் செயலாளர், கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேற்று ஆவணம் விநியோகித்தல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

6. இவ் அறிவித்தலின் இறுதியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 06 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி ஒன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகதிறேன். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்கவேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. விண்ணப்பப்படிவத்தை 2016, செத்தெம்பர் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு கோட்டக்கல்வி பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. அறிவித்தலில் குறிப்பிட்டிருக்கும்படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை கட்டணங்களை செலுத்த வேண்டுமானால், அதற்குரிய பற்றுச்சீட்டுடன் நேர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்கு பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கைக் கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையினை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருத்தில் கொள்ளுதலாகாது.

10. (i) விண்ணப்பதாரர், தமக்கு அறிவிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் குறிப்பிட்ட பரீட்சை எண்ணின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும்சகல விண்ணப்பதாரரும் பரீட்சையின் முதலாவது நாள் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மண்டப பொறுப்பாளரிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை வழங்க முன்வராத விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டா.

(ii) மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு,

என்பவை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற் தடவையில் கட்டணம் அறவிடப் பட மாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :

முழுமையான பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.
ஒரு பாடத்திற்காக 200 ரூபா.

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணமாக மணி ஓடர் அல்லது முத்திரைகள் பாரமெடுக்கப்பட மாட்டாது.

13. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

14. இங்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

15. இவ்வறிவித்தலில் உள்ளடங்காத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது குறித்து முடிவெடுக்கும் பொறுப்பு கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும்.

டபிள்யூ. எம். பந்துசேன.
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்தை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016**

Efficiency Bar Examination for Officers in Class 2 in Sri Lanka Principals Service - 2016

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்.)

2. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMANTH KUMARA GUNAWARDANA)

(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக் களுடன் ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :---.
(உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K.)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. முகவரி :

(i) சொந்த :----.

(ii) அலுவலகம் :----.

(iii) அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iv) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு/ தரம் :----.

(ii) பாடசாலை/ அலுவலகம் :----.

(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

5. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iii) ஆண்/ பெண் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்.)

6. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் :

| | |
|---|---|
| பாட இலக்கம் 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் கண்காணிப்பு | ☐ |
| பாட இலக்கம் 02 - பாடசாலைத் திட்டமிடல் | ☐ |
| பாட இலக்கம் 03 - கல்வியின் நவீன போக்குகள் மற்றும் நடைமுறைகள் | ☐ |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்.)

7. இதற்கு முன்னர் இல. 1086/ 26 மற்றும் 1999.07.02 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப் பிற்கமைய நடைபெற்ற வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் பாடசாலை நிருவாகம் மற்றும் கண்காணிப்புப் பாடத்தில் சித்திபெற்ற உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் இல. 33/ 2014 இற்கு ஏற்ப இந்த 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டலில் பாடசாலை நிர்வாகம் மற்றும் கண்காணிப்புப் பாடத்தில் சித்தியடைய வேண்டும் என்ற தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். அப்பாடம் சித்தி பெற்றிருப்பின்

பெயர், வருடம், பெறுபேறு மற்றும் தோற்றிய மொழி என்பவற்றைக் குறிப்பிடவும்.

| பாடம் | ஆண்டு | பெறுபேறு | மொழி |
|---|---|---|---|
| பாடசாலை நிருவாகம் மற்றும் கண்காணிப்பு | | | |

8. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரம் :
பற்றுச்சீட்டு இல. :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

9. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. பரீட்சை ஆணையாளர் நாயகம் :
மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்ட/ வலய உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

----,
கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை இடவும்.)
(பொருத்தமற்ற சொல்லை நீக்கவும்.)

8-811/ 1

---

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016

2014.10.22 ஆந் திகதிய 1885/ 31 ஆம் இலக்க இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2016, திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதனை இத்தால் அறியத் தருகிறேன்.

2. இப்பரீட்சைகளின் உரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 2014.10.22 ஆந் திகதிய 1885/ 31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக இப்பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிகள்.- வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) பாட இல. 01 - தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் - 100 புள்ளிகள் (நேரம் : 2 மணித்தியாலம்)

(ii) பாட இல. 02 - பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதிப்பிரமாணம் - 100 புள்ளிகள் (நேரம் : 2 மணித்தியாலம்)

பாடத்திட்டம் :

(i) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் - (நேரம் : 2 மணித்தியாலம்)

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் பற்றிய அறிவினைப் பரீட்சித்தல் ;

(ii) பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணம் - (நேரம் : இரண்டு மணித்தியாலம்).- வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், பணத்தினைப் பொறுப்பேற்றல், கணக்குப் பதிவு மற்றும் கொடுப்பனவு, அரச நிதிப் பொறுப்புடமை, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்கு, வேலைகள் மற்றும் சேவைகள், பொருள் கணக்கெடுப்பு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற பேரேடுகள், வருமானச் செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக்கூற்று, சென்மதிச் சம்பளம், கடமை தொலைபேசி தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணம் பற்றிய சாதாரண அறிவு பரீட்சிக்கப்படும்.

3. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் அவ்வப் பாடங்களில் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

4. பரீட்சையின் மொழி மூலம் : சிங்களம் மற்றும் தமிழ் (விண்ணப்பிக்கப்பட்ட மொழியினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது)

5. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

5.1 பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறுபேற்றுப் பட்டியல் செயலாளர், கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேற்று ஆவணம் விநியோகித்தல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படமாட்டாது.

6. மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. விண்ணப்பப்படிவத்தை 2016, செத்தெம்பர் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்லிப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளரிளால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. அறிவித்தலில் குறிப்பிட்டிருக்கும்படி விண்ணப்பங்களை ஏற்றுக்கௌள்ளும் இறுதி திகதி அல்லது அதற்கு முன் பரீட்சை கட்டணங்களை செலுத்த வேண்டுமானால், அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையில் பெயரைக்குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்கு பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையினை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. (i) விண்ணப்பதாரர், தமக்கு அறிவிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் குறிப்பிட்ட பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றமளிக்கும் சகல விண்ணப்பதாரரும் பரீட்சையின் முதலாவது நாள் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மண்டப பொறுப்பாளரிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை வழங்க முன்வராத விண்ணப்பதாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது,

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு,

என்பவை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற் தடவையில் கட்டணம் அறவிடப் பட மாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :

முழுமையான பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.
ஒரு பாடத்திற்காக 200 ரூபா.

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளயர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களுக்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணமாக மணி ஓடர் அல்லது முத்திரைகள் பாரமெடுக் கப்பட மாட்டாது.

13. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். இச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

14. இங்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

15. இவ்வறிவித்தலில் உள்ளடங்காத ஏதாவது விடயங்கள் இருப்பின் அது குறித்து முடிவெடுக்கும் பொறுப்பு கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும்.

டபிள்யு. எம். பந்துசேன.
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பெலவத்தை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016**

Efficiency Bar Examination for Officers in Class 3 in Sri Lanka Principals Service - 2016

(கோட்ட அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப் பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

2. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMANTH KUMARA GUNAWARDANA)
(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக் களுடன் ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :---.
(உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K.)
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. முகவரி :
(i) சொந்த :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iv) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு/ தரம் :----.
(ii) பாடசாலை/ அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

5. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iii) ஆண்/ பெண் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்.)

6. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் :

பாட இலக்கம் 01 - தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்குவிதி கள் ☐

பாட இலக்கம் 02 - பாடசாலை நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பிரமாணம் ☐

(உரிய பாட இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்.)

7. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரம் :
பற்றுச்சீட்டு இல. :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

8. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. பரீட்சை ஆணையாளர் நாயகம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்ட/ வலய/ மாகாண உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

----,
கோட்ட/வலயக் கல்விப் பணிப்பாளர்/மேலதிக கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை இடவும்.)
(பொருத்தமற்ற சொல்லை நீக்கவும்.)

8-811/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.